# இல. உளவுத்துறை அதிகாரி இந்தியாவுக்குள் ஊடுருவல்


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 29 இதழ் 153
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 13 — 07 — 1992


(சென்னை)
இலங்கையின் உளவுத்துறையைச் சேர்ந்த உயர் அதிகாரி பிரான்சிஸ் அலஸ் இலங்கைத் தூதரக முதல் அதிகாரியாக

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகளின்தாக்குதலையடுத்து சரணாலயம் மூடப்பட்டது

(கொழும்பு)
வில்பத்து சரணாலயம் மூடப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.
வில்பத்து சரணாலயத்திற்

(4ம் பக்கம் பார்க்க)

## பல காவலரண்களிலிருந்து படையினர் பின்வாங்கினர்

(வவுனியா)
செட்டிக்குளம் கட்டுப்பொத்த இராணுவமுகாம் விடுதலைப்புலிகளால் தகர்க்கப்பட்டதை அடுத்து செட்

(4-ம் பக்கம் பார்க்க)

★ மண்ணெண்ணெய், தேங்காய்எண்ணெய், சவர்க்காரம் போன்ற

# பாவனைப்பொருள்பதுக்கலுக்கு நீண்டகாலம் தடுத்துவைப்பு!

## காவல்துறை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்தச் சூழ்நிலையைச் சாட்டாக வைத்து, அத்தியாவசியப் பொருள்களைக் கூடுதல் விலைக்கு விற்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன், மீறுவோர் நீண்ட காலத்திற்குத் தடுத்து வைக்கப்படுவர் என்று தமிழீழக் காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தமிழீழ காவல்துறையினர் நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: தற்போதைய யுத்தகால சூழ்நிலையைச் சாட்டாக வைத்து மக்களின் அத்தியாவசியப் பொருட்களில் ஒன்றான மண்ணெண்ணெய், தேங்காய்

(4ம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டைத் துண்டிக்கும் நோக்கம் நிறைவேறவில்லை

(லண்டன்)

யாழ்ப்பாணம் குடாநாட்டை ஏனையபகுதிகளோடு துண்டிக்கும் நிலையை இலங்கை இராணுவம் இன்னும் நிறைவேற்றவில்லையென பி. பி. சி. நேற்றைய செய்தி விமர்சனத்தில் குறிப்பிட்டுள்ளது.

ஒரு தனித் தாக்குதலில் 47

(4-ம் பக்கம் பார்க்க)

## கடற்படையினரின் தொல்லை அதிகரிப்பு

(பளை)

வடமராட்சி கிழக்கு தாளையடி கடலில் மீனவர்கள் மீது கடற்படையினர் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

நேற்று முன்தினம் உடுத்துறைப்பகுதியில் மீனவர் ஒருவர் கடற்படையால் தாக்கப்பட்டு கடலில் தூக்கி எறியப்பட்டார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## முப்படைத் தளபதிகள் உயிருக்கு உலைவைக்க சதித்திட்டம்?

(கொழும்பு)

இலங்கையின் முப்படைத் தளபதிகள் மீது விரைவில் தாக்குதல் நடாத்தப்படலாம் என இராணுவ புலனாய்வு அறிக்கைகள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதற்கென சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளதாகவும் அவ்வறிக்கைகள் மேலும் தெரிவித்துள்ளன.

இராணுவ தளபதி சிசில் வைத்தியரத்ன, கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோ, விமானப் படைத்தளபதி ஏயர் மார்ஷல் ரெறன்ஸ் குணவர்த்தன ஆகியோரே முப்படைத்தளபதிகளாவர். (க)

## பிரேமா - ஜே. ஆர். மோதல் ஆரம்பம்?

(லண்டன்)

இலங்கை முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும், தற்போதைய ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாசாவுக்கும் இடையில் தற்போது ஒரு மோதல் நிலை உருவாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லேக்ஹவுஸ் நிறுவனத்திடம் இருந்து திரு. ஜெயவர்த்தன 39 கோடி ரூபா நஷ்டஈடு கேட்டிருப்பதை அடுத்தே இந்த மோதல் நிலை உருவாகி உள்ளது.

லேக்ஹவுஸ் நிறுவனம் திரு. ஜெயவர்த்தனவின் நிபந்தனைப்படி நிபந்தனையற்ற மன்

(4-ம்பக்கம் பார்க்க)

## தொண்டர் ஆசிரியரை நிரந்தரமாக்க புதிய யோசனைகள் சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலுள்ள தொண்டர் ஆசிரியர்களை ஏனைய மாகாண தொண்டர் ஆசிரியர்கள் போல நிரந்தரமாக்க உடன் நடவடிக்கை தேவையென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அவசர வேண்டுகோள் ஒன்றை கல்வி அமைச்சரான ஜனாதிபதியிடம் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அனுப்பி வைக்கப்பட்ட தந்தி மகஜர் ஆகியவற்றில் க. பொ. த. சபை தலைவரோ அல்லது உறுப்பினரோ செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் வந்து நேர்முகப் பரீட்சையை நடத்தலாம் எனவும் அதற்குப்பயந்தால் பின்வரும் மாற்று வழிக

(4ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்குப் போரினால் 2,000 ஆசிரியர்கள் ஓய்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு பகுதிகளில் ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலை காரணமாக சுமார் இரண்டாயிரம் தமிழ் ஆசிரியர்கள் ஓய்வு பெற்றுள்ளதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தொகை தமிழ் ஆசிரியர்கள் தொகையில் ஏறக்குறைய 10 சதவீத வீழ்ச்சி எனவும் இவ்வாறான வீழ்ச்சி இலங்கையின் சரித்திரத்தில் மிக மோசமாகக் காணப்படுவது இதுவே முதல் தடவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின்படி 1990-ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 1991-ல் ஆசிரியர் தொகையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்

(4-ம் பக்கம் பார்க்க)

கொக்கட்டிச்சோலை படுகொலை:

## 14 இராணுவத்தினருக்கு எதிராக அடுத்தவாரம் விசாரணை

(கொழும்பு)

கொக்கட்டிச்சோலை படுகொலைச் சம்பவம் தொடர்பாக 14 இராணுவத்தினருக்கு எதிரான இராணுவ விசாரணை அடுத்த வாரம் நடைபெறவிருப்பதாக உயர் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் 13ம் திகதி கொக்கட்டிச்சோலையில் நூற்றுக்கு மேற்பட்ட தமிழர் இராணுவத்தினரால் கண்மூடித்தனமாக சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே. (க)

தம்புல்ல சத்தியாக்கிரகம்:

## ஒருலட்சம்பேர்பங்குபற்றினர் 6000பொலிஸார்பாதுகாப்பு

(கொழும்பு)

தம்புள்ளையில் நேற்று அரசுக்கு எதிராக நடைபெற்ற சத்தியாக்கிரக போராட்டத்தில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர் இதில் 3000 பேர் பௌத்த பிக்குகள்.

இந்த சத்தியாக்கிரக போராட்டத்தில்கத்தோலிக்க மக்களை பிரதிநிதிப்படுத்தும் வகையில் கத்தோலிக்க மத குருமாரும் கலந்துகொண்ட

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### சோபிதா

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம், 'சோபிதா' 363 கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். (ஏ-2207)

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணை கிடைக்குமிடம். எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6448)

### திருமணசேவை

நல்லூர் ஒய்வூதியர் சங்கம் சேவை அடிப்படையில் திருமணசேவை ஆரம்பித்துள்ளது. சகல வயது, சமயம், தொழில், சீதனம், தாரமிழந்தவர்கள் உட்பட குறிப்புகள் உண்டு. நலன்விரும்பிகள் முழுவிபரங்களுடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளலாம். செயலாளர், 52, செம்மணி வீதி நல்லூர். (சி-6525)

### "விண்ணில் அல்ல விடிவெள்ளி"

மீரா வெளியீடு தாமரைச் செல்வி எழுதியது "விண்ணில் மட்டுமா விடிவெள்ளி பூக்கும் மண்மீதும் பூக்கும் மானிட நேயத்தால்" சமூக நாவல் விற்பனையாகிறது. (சி-6528)

### வெளிவந்துவிட்டது

ஆண்டு 9 ற்கான (ஒன்பதிற்கான) சைவசமய நெறி வினாவிடை. விலை இருபது ரூபா. தொகுப்பு கு. பரராஜசேகரம் (பி. ஏ.) வெளியீடு சரசாலை இந்து இளைஞர் மன்றம், குடாநாட்டில் புத்தக விற்பனை நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம். (சி-6529)

### கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள கால்நடைத் தீவன உற்பத்தியாளர்களுக்கான கூட்டம் நாளை 14-ம் திகதி காலை 9 மணிக்கு தாவடியிலுள்ள தமிழீழ ஆய்வு நிறுவன மையப் பணியகத்தில் நடைபெறவுள்ளது.

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ் பிரதேச சாரணர் சங்கத்தின் பொதுக்கூட்டம் 13ம் திகதி இன்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் பிற்பகல் 3-00 மணிக்கு மாவட்ட ஆணையாளர் திரு இ. மகேந்திரன் தலைமையில் நடைபெறும்.

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்விக்கோட்டப்பாடசாலைகளுக்கிடையிலான மேஜர் முரளி ஞாபகார்த்த விளையாட்டு விழா இன்று திங்கட்கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளது. ஆரம்ப நிகழ்ச்சியாக மேஜர் முரளிக்கு கொத்தணி, தேசிய, தனியார் பாடசாலைகளிலிருந்து எடுத்து வரப்படும் செய்தி (ஓடிவருதல்) அஞ்சல் தியாகி திலீபன் நினைவுத்தூபிக்கு முன்னால் தெரிவிக்கப்பட்டு மேஜர் முரளிக்கு அஞ்சலி செலுத்தப்படும், இதன் பின்னர் பாடசாலைகளுக்கிடையில் தாச்சி, உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், கயிறடித்தல், மெய்வல்லுநர் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

## இராசி பலன்

13-07-1992

திங்கட்கிழமை

(தமிழுக்கு ஆனி 29)

சதுர்த்தசி மு. இ. 11-30 வரை. மூலம் மாலை 6-58 வரை, இராகுகாலம் காலை 7-30 முதல் 9-00 வரை, சுப நேரம் பகல் 12-00முதல் 1-30 வரை, பவித்திர சதுர்த்தி.

மேடம்: பகைவர் பிணக்கு, வீண்பழி, மனஉளைச்சல்.

இடபம்: மறைமுகதொல்லை, அவமதிப்பு, உடல்உபாதை.

மிதுனம்: கூட்டுமுயற்சி, மதிப்பு, குடும்ப சந்தோஷம்,

கடகம்: தருமகாரியம், தொழில்சிறப்பு, கல்விச் சிறப்பு.

சிங்கம்: காரிய விக்கினம், நிராசை, மனவேதனை.

கன்னி: மேலதிகாரிகள் சீற்றம், பணமுடை, இனசன பகை.

துலாம்: பகைஅழியும், தொழில் உயர்வு, பயணம்.

விருச்சிகம்: வயிற்றுக் கடுப்பு, வீண்சிரமம், அலைச்சல்.

தனுசு: சரீர களைப்பு, அதிக பிரயாசம், குடும்பநன்மை.

மகரம்: வேண்டாத உறவு, தொழில் நஷ்டம், மறதி.

கும்பம்: உறவினர் மகிழ்ச்சி, இனிய வார்த்தை, பணவரவு.

மீனம்: புத்திரர் பெருமை, சாஸ்திரஞானம், விவேகம்.

—ஜோஸ்யர்

நெய்தல் —

## ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகள் கடற்புலிகள் அமைப்புக் கலைஞர்கள் இணைந்து, விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய 'நெய்தல்' பாடல் ஒலிப்பதிவுநாடா வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் யாழ். புனித. பத்திரிசியார் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் யாழ் மாவட்ட கடற்புலி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மறவன் தலைமையில் நடைபெற்றது.

நாடாவை திரு. யோகரத்தினம் யோகி பெற்றுக்கொண்டார்.

தமிழீழ கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை வெளியீட்டுரை நிகழ்த்த வண. பிதா யோசப் ஜி ஏ. பிரான்சிஸ் அடிகளார் ஆசியுரை வழங்கினார். (சு)

## 16 ம் நாள் நினைவஞ்சலி

### N. கயிலாசக்கம்பர்

(நாதஸ்வர வித்துவான்)

தோற்றம்: 17-03-1898 மறைவு: 28-06-1992

காரைநகர் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான நாதஸ்வர வித்துவான் கயிலாசக்கம்பர் அவர்களின் 16ம் நினைவு நாள் 13-07-92 திங்கட்கிழமை இன்று சித்தன் கேணியில் நடைபெறும்

நாட்கள் பதினாறு சென்றதையா ஆனாலும் எம் உள்ளத்தில் என்றும் ஒளி வீசும் தெய்வமாக நிலைத்து நிற்கும் எங்கள் அன்புத் தந்தையை நித்தமும் பூஜிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கும்

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம். (சி-6527)

காரைநகர் கொத்தணி

## யா/கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வி.

## பாடசாலை அபிவிருத்திச் சபை

மேற்குறித்த சபையின் மீளமைப்பு, கல்வி அமைச்சு புதிய சுற்றுநிருபத்துக்கு அமைவாக நடைபெறும்.

**இதற்கான பொதுக்கூட்டமும், தெரிவுகளும் 19-7-92 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் நிகழவுள்ளன.**

ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் உரிய நாளில் சமுகமளித்து ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். நன்றி

செ. தேவதாசன்,
அதிபர் / தலைவர்.

(சி-6520)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

## யாழ். கிளை தலைமையகம்

## பதவி வெற்றிடம்

1. ஆங்கில ஆசிரியர்
2. ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்தாளர் ஆசிரியர்
3. தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்தாளர் ஆசிரியர்

மேற்படி பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்வித்தகமைகள், அனுபவம், ஆற்றல், ஆர்வம், சேவை செய்யும் மனப்பான்மை உள்ளோர் விரும்பப்படுவர்.

தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்தாளருக்கு செய்முறைப் பரீட்சை 24-07-92 பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெறும். ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்தாளருக்கான செய்முறைப் பரீட்சை 25-07-92 பிற்பகல் 1 00 மணிக்கு நடைபெறும். தமது தட்டச்சு இயந்திரங்களை கொண்டு வரவும்.

விண்ணப்பப் படிவங்கள் யாவும் 13-07-92க்கு முன் கிடைக்க கூடியதாக எமக்கு அனுப்பி வைக்கவும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

**தமிழ், ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து பயிலும் மாணவர்கள்**

மேற்படி கல்வி பயில விரும்பும் மாணவர்கள் தமது விண்ணப்பப் படிவங்களை 24-07-92 க்கு முன் கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கவும். இதற்கான நேர்முகப் பரீட்சை 30-07-92இல்நடைபெறும். தனித் தனிக் கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி. யாழ்ப்பாணம்,
11-07-92. (ஏ-2289)

## Thileepan Research Fellowship

FOR BIOTECHNOLOGY 1992

Those who applied for the above fellowship please be present for an interview with all documents on 17th July, 1992 at 10-00 a.m in the office of the Dean, Faculty of Medicine.

Registrar,
University of Jaffna.
(A-2288)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில் 08 | 09 | 1950



அமலனின் பாதத்தில் 13 | 07 | 1991

## யோசவ் ஜெயருணி

(BABA)

பன்னிரு திங்கள் மறைந்ததம்மா
பன்னீராயிரம் நினைவலைகள் தோணுதம்மா
அன்பின் ஒளிவிளக்காய் அழகின் திருவுருவாய்
பண்பிலே சிகரமாய் பார்வையிலே சேவகியாய்
பொறப்புடன் வலம்வந்தாய் ஆண்டுகள் நாற்பத்தொன்று
சிறப்புடன் மறைந்துவிட்டாய் எம்மைச் சீரழிய வைத்துவிட்டு
அம்மா நான் உங்களை இறுதிவரை பார்ப்பேன் என்றாய்
அம்மாவைத் தவிக்கவிட்டு தனிவழியே சென்றுவிட்டாய்
அன்பான செல்வங்கள் எண்மரை அவனியில் உருவாக்கினாய்
அவர்களைப் பிரிந்த துன்பம் அவருளத்தில்
அணுவளவும் மாறுதம்மா
அண்ணா, தம்பி வரவை ஆவலுடன் எதிர்பார்த்தாய்
அன்னவரைக் காணுமுன்னே அமலன் உனைப் பிரித்துவிட்டான்
'பபா' என்றாலே வாய் இனிக்கும், உளம் இனிக்கும்
பண்பான உன்முகத்தைக்காணக் கொடுத்து வைக்கவில்லை
என்ன சொல்ல அழைத்திருப்பாய்
என்றெல்லாம் ஏங்கி நின்றேன்
எண்ணி எண்ணி வாடுகின்றேன்
ஏக்கந்தீராது என்வாழ்வில் இனியென்று.

இப்படிக்கு
பிரிவால் துயருறும்
தாய், சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்மார், மச்சாள்மார்,
பெருமக்கள், மருமகள்.

26, கொண்டடி வீதி,
யாழ்ப்பாணம். (சி-6526)

★ 25வது ஒலிம்பிக்போட்டி

# 257 பல்வேறு வகையான போட்டிகள்; 16,000 வீரர், வீராங்கனைகள் பங்குபற்றுவர்!

ஒருபுறம் கடல், மறுபுறம் மலை: இடையில் ஆறு போன்ற இயற்கை அழகைக் கொண்டது தான் ''பஸ்ஸலோனு'' நகரம். இங்கு தான் 25வது ஒலிம்பிக் போட்டிகள் இம்மாதம் 25-ம் திகதி முதல் அடுத்தமாதம் 9-ம்திகதிவரை நடைபெறவுள்ளது.

ஸ்பெயின் நாட்டின் மத்திய தரைக் கடலில் அமைந்துள்ள துறைமுக நகரம் இது.

உலகத்திலேயே அதிக நாடுகள் கலந்து கொள்ளும் முதல் தர விளையாட்டுப் போட்டியாகக் கருதப்படும் ஒலிம்பிக்போட்டி பஸ்ஸலோனுவிலுள்ள பழமை வாய்ந்த விளையாட்டரங்கான ''மான்யூயிட்'' அரங்கில் தொடக்க விழாவும், நிறைவு விழாவும் நடைபெறவுள்ளது.

மேற்படி விளையாட்டரங்கின் அருகாமையில் தான் நவீன வசதிகளைக் கொண்டதும் 17 ஆயிரம் பேர் அமரக் கூடியதுமான புதிய விளையாட்டரங்கு அமைக்கப்பட்டுள்ளது.

### ராட்சதக் கட்டடங்கள்

பலகோடி டொலர் செலவில் அமைக்கப்பட்டுள்ள ஒலிம்பிக் கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட 2 ஆயிரம்மாடிவீடுகளில் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளவிருக்கும் 16 ஆயிரம் வீரர்களும், வீராங்கனைகளும் தங்கியிருப்பார்கள். இப்போட்டிகளைப் பார்ப்பதற்காக உலகம் முழுவதிலும் இருந்து வரும் ரசிகர் கூட்டம் தங்குவதற்காக களியாட்டங்கள் நிறைந்த 16 பிரமாண்டமான உல்லாச விடுதிகளும்கட்டப்பட்டுள்ளன. இவற்றுடன் அலுவலகத்திற்கும், பிரமுகர்களுக்குமாக 43 மாடிகளைக் கொண்ட இருபெரும்ராட்சதக் கட்டடங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

இப்போட்டியைப் பார்வையிட உலகின் பல பாகங்களிலுமிருந்து 5 லட்சம் பேர் ஸ்பெயின் நாட்டுக்கு வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இங்கு அமைக்கப்பட்ட நவீன வீதிகளில் மக்கள் நடக்கத் தேவையில்லை. விமான நிலையங்களில் அமைக்கப்பட்டிருக்கும் நகரும் 'பெல்டுகள்' போல் இவை இருக்கின்றன. இவை மக்களை ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு சொகுசாகச் சுமந்து செல்லக்கூடியன. இந்த பிரமாண்டமான பெல்டுகளில் ஒரே நேரத்தில் 14 ஆயிரம் பேர் வரை பயணம் செய்யலாம்.

ஒலிம்பிக் போட்டிகளை லட்சக்கணக்கான மக்கள் நேரடியாகப்பார்ப்பதைவிட கோடிக்கணக்கான மக்கள் தொலைக் காட்சிகளிலேயே பார்த்துவருகின்றார்கள்.

தெளிவாகப் பார்ப்பதற்காகத் தொழில் நுட்பம் நிறைந்த 800 அடி உயரமான தொலைத் தொடர்புக் கோபுரமும் ஸ்பெயினில் அமைக்கப்பட்டுள்ளது. இதை விட உடனுக்குடன் செய்திகளை தடங்கலின்றி உலகம் முழுவதற்கும் அனுப்புவதற்கு 350 தொலைத்தொடர்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

### 25 விளையாட்டுப் பிரிவுகள்

இம்முறை நடைபெறும் ஒலிம்பிக் போட்டியில் 25விளையாட்டுப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன, இந்த விளையாட்டுப பிரிவுகள் 257 வகையான போட்டிகளை நடாத்தவுள்ளன, இப் போட்டிகளில் வெற்றிபெறும் வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் 549 தங்கம், 549 வெள்ளி, 593 வெண்கலப்பதக்கங்களும், 4408சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. இப் பதக்கங்களை ஸ்பெயின் நாட்டின பிரபல சிற்பியான பேபிபர் கர்பாரு வடிவமைத்துள்ளார்.

269 நாடுகள் பங்கு பற்றும் இந்த ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்கா தான் கூடுதலான விளையாட்டு வீரர்களை அனுப்புகின்றது. அமெரிக்கா 650 விளையாட்டு வீரர்களையும், வீராங்கனைகளையும் அனுப்புவதுடன் பயிற்றுநாகள், மருத்துவர்கள், உத்தியோகத்தர்கள் உட்பட 350 மேலதிக மானேரையும்அனுப்புகின்றது

விளையாட்டு வீரர்களுக்கும், அரசியல் தலைவர்களுக்கும் பாதுகாப்புகளை வழங்குவதற்கு ஸ்பெயின் நாட்டு பாதுகாப்பு அமைச்சு பலமுன்னேற்பாடுகளைச் செய்துள்ளது. பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக 45 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொலிசாரும், இராணுவத்தினரும் ''பஸ்ஸலோனு'' நகரில் தற்போது குவிக்கப்பட்டுள்ளார்கள். ஒலிம்பிக் போட்டிகளை சீர்குலைப்போம் என ஸ்பெயினில் இயங்கி வரும் ஏ. டி. ஏ. என்னும் தீவிரவாதக் குழு பயமுறுத்தல்செய்ததை அடுத்தே இந்த முன்னேற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

12 ஆயிரம்இராணுவத்தினர் 20 ஆயிரம் பொலிஸார், 10 ஆயிரம் ஊர்காவல் படையினர்களுடன், 5 ஆயிரம் இராணுவத்தினர் சாதாரண உடையணிந்து பாதுகாப்புச் சேவையில் ஈடுபடவுள்ளார்கள். இவர்களுக்கு மிக நவீனரக ஆயுதங்களும் வழங்கப்படவுள்ளது.

### அரசியலும் விளையாட்டும்

அரசியலும் விளையாட்டும் ஒன்றுகக் கலந்துவிட்ட இன்றைய காலகட்டத்தில், இந்த ஒலிம்பிக்போட்டியில் யூக்கோஸ்லேவியாவுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஆனல் இந்த நாட்டுடனிருந்துபிரிந்து போன குரோஷியா, சுலோவேவனியா நாடுகள் தனித்தனியாக தமது விளையாட்டு வீரர்களை பஸ்ஸலோனுவுக்கு அனுப்பியுள்ளது. சோவியத யூனியன் என்ற பெயர் மறைந்துவிட்ட இவ்வேளையில் இதிலிருந்து பிளவுபட்ட 12 நாடுகளும் கூட்டாக விளையாட்டு வீரர்களை அனுப்பியுள்ளன. இதுவரை காலமும் கிழக்கு-மேற்கு ஜேர்மன் கோஷ்டிகள் என்ற பெயரில் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்ட ஜேர்மனியர் இம்முறை கூட்டாக விளையாட்டு வீரர்களை அனுப்புவது குறிப்பிடத்தக்கது. இதேவேளை 32 ஆண்டுகளுக்குப் பின்பு தென் ஆபிரிக்கா முதல் தடவையாக இந்த ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ளுவது சிறப்பம்சமாகும். இம்முறை ஒலிம்பிக் போட்டிகளை நேரில் பார்ப்பதற்காக பல உலக நாடுகளின் முக்கிய அரசியல் வாதிகள் ஸ்பெயினுக்கு வருகை தரவுள்ளார்கள். இவர்களில் கியூபா அதிபர் பிடல் கஸ்ரோ, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ புஷ், ரஷ்ய ஜனாதிபதி ஜெல்ஸின், ஜேர்மன் அதிபர் ஹெல்மட் ஹோல் ஆகியோர் இதில் அடங்குவர்.

இதுவரை காலமும் ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்கா, சோவியத்யூனியன் கிழக்கு, மேற்கு ஜேர்மன் நாடுகளிடையே கடும்

(4-ம் பக்கம் பார்க்க)

## விசாரணை

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணை இன்னும் 6 வாரங்களில் பூனமலை நீதிமன்றில் ஆரம்பமாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கென பூனமலைமாஜிஸ்திரேட் நீதிமன்று 46 லட்ச ரூபா செலவில் புனரமைக்கப்படுகிறது.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி அலைகள்

(13.07.1992)



அன்னையின் மடியில்

வீர ஜனனம்: 08-12-1969

★

தமிழ்த் தாயின் மடியில்

வீர மரணம்: 13-07-1991

★

## 2ம் லெப்டினன்ட் வீர வேங்கை 'கவி'

[சிவரட்ணம் ராஜி]

தமிழீழ வரலாற்று முக்கியத்துவம் பெற்ற ஆனையிறவு முகாம் முற்றுகையின்போது நேரடி மோதலில் தன் உயிரை தமிழிற்கும் உடலை தமிழ் மண்ணிற்கும் அர்ப்பணித்த 2-ம் லெப்டினன்ட் கவிக்கு எங்கள் உள்ளம் கனிந்து நிறைந்த 1-ம் ஆண்டு கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

காலமெனும் காலனுடன் காற்ருய் கலந்துவிட்ட காவியக் கவியே!
தமிழீழம் என்னும் யாகத்தீயிலே சென் நெருப்பானவளே!
அஞ்சிடோம் அஞ்சிடோம் தமிழீழம் தனை காத்திட அஞ்சிடோம்,
மிஞ்சியது உயிராஞலும் அதையும் கொடுத்திட அஞ்சிடோம் என்ருயே!
தூங்கிய தமிழினமே துடித்து எழுந்திடு!
ஏங்கியே நிற்கும் தமிழ் அன்னை தனை காத்திட ஏந்திடு ஆயுதம்தனை.
ஆதவன் போல எம் அண்ணன் இருக்கிறுன் அஞ்சாதே - களம் தனை
நோக்கி ஓடிடு! களப்புலியாக மாறிடு! தமிழீழம் தனை காத்திடு என்ருயே!
ஏங்கிய மனதோடு தாங்கியே நிற்கிறோம்
உன் பிரிவுத் துயர்தனை.

மாவீரர் ஆகிவிட்ட கவி எழுதிய கவிதை வரிகள் சில...

ஆயிரம் படைகள் வந்தால் என்ன?
அன்னியர் ஆட்சி நடந்தால் என்ன?
எம் அண்ணனின் தலைமையில்
ஒரு செந்தமிழ் ஈழம் மலர்ந்தே தீரும்!
மண்மீட்புக்காக மாண்டுபோன மாவீரவேங்கைகளே!
என் உடன் பிறப்புக்களே நீங்கள் மீண்டும் எழுவீர்கள்
தமிழுக்காக மீண்டும் மலர்வீர்கள் தமிழீழத்தில்.

(கவி)

நினைவு கூருவோர்:

பெற்ருேரும், சகோதர சகோதரிகளும்

ஐந்து சந்தி, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி6530)

## - தேவா -

## இன்று ரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை வீரமாகாளி அம்மன் தேர் உற்சவம் இன்று திங்கள் காலை 8-00 மணிக்கு நடைபெறும். நாளை செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறும். [க]

0 0 0

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் ஓடையம்பதி ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலய ரதோற்வம் இன்று திங்கள் நடைபெறுகிறது. காலை 8-00 மணிக்கு வசந்தமண்டபப் பூசையையடுத்து 9-00 மணிக்கு கற்பகவிநாயகர் தேரில் பக்தர்களுக்கு காட்சிதருவார். நாளை செவ்வாய்க்கிழமை காலை தீர்த்தோற்சவமும் மறுநாள் மாலை பூங்காவனமும் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

வண்ணையம்பதி ஐயனர் கோவில் விசுவேச விநாயகர் ஆலய ரதோற்சவம் இன்று திங்கள் காலை நடைபெறுகிறது. நாளை செவ்வாய்த் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

0 0 0

(பண்டத்தரிப்பு)

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலய ரதோற்சவம் இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய் தீர்த்தோற்சவமும் நடைபெறும். [82]

## 1-ம் ஆண்டு நினைவுதினம்

★  ★

வீரவேங்கை

## கிருஷ்ணபிள்ளை சுதாகர் [ஜஸ்ரின்]

தமிழன் இருக்கும் வரையில் குன்ருத
புகழாகிய விளக்குப் போன்ற தலைவன்
தலைவனின் வழியில் நடந்த எம்
குடும்பத்தின் தலைமகன் நீ
கோட்டையினை மீட்பதற்காய்
போரிட்டு மீண்டுவந்தாய் நீ
ஆனையிறவை மீட்டுவர சென்றங்கே
பாதியிலே விட்டு நீ
ஆனையிறவுப் புழுதி உதிர வெள்ளம்
மிகும்படி வீழ்ந்த மாவீரன் நீ
உன்னுடன் குருதி சிந்திய ஏனைய
45 மாவீரர்களையும் இந்நாளில்
நினைவு கொள்ளும்

குடும்பத்தினர்.

கட்டைப்புளியடி,
கொற்ருவத்தை,
அல்வாய் மேற்கு.

(ஏ-2290)

# வடக்கு-கிழக்கு மாணவர்க்கு நீதி கிடைக்க வேண்டும்

## தமிழர் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்குத் தமிழ் மாணவர்களுக்கு நீதிகிடைக்க ஆவனசெய்யவேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பல்கலைக்கழகத்தின் ஒரே அனுமதிக்காக இரு வேறு பரீட்சைகள் நடத்துவது தவறு என்றும், உலகத்தில் வேறு எந்தப் பகுதியிலும் இவ்வாறான முறை இல்லையென்றும், நாடளாவிய ரீதியில் சமகாலத்தில் பரீட்சை நடத்தக்கூடிய சூழ்நிலை வரும் வரை பரீட்சையைப் பிற்போடுமாறும் 1990இல் கல்வி அமைச்சராக இருந்த கல்வி, உயர் கல்வி அமைச்சர் திரு. அத்துலத் முதலியிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வலியுறுத்திக் கேட்டிருந்தது. அக்கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் இன்று பல்கலைக்கழக அனுமதியில் இப் புதிய பிரச்சினை தோன்றியிராது.

அதற்கு மாறாக இன்று பரீட்சைகளை வேறு பரீட்சையாக கணிப்பதையும், வடக்கு கிழக்கு மாணவர்கள் அதனால் படிப்பதையும் தமிழர் ஆசிரியர் சங்கம் ஏற்றுக்கொள்ளமாட்டாது. அந்நாள் கல்வியமைச்சர் லலித் அத்துலத் முதலி விட்டதவறிற்காக வடக்கு கிழக்கு தமிழ் மாணவர்கள் பாதிப்படையாது பாதுகாக்கும் பொறுப்பு தற்போதைய கல்வி அமைச்சரான ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவினுடையது

இவ்விவகாரத்தில் ஜனாதிபதி நேரடியாகத் தலையிட்டு, வடக்கு-கிழக்கு மாணவர்களுக்கு நீதி கிடைக்க ஆவன செய்யவேண்டும்.

---

### ஹெரோயின் கடத்தலில் 4 தமிழர் கைது

(கொழும்பு)

அறுபது லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைவஸ்து கடத்தல் தொடர்பாக இரு தமிழ் இளைஞர்களும் மற்றும் இரு தமிழ் பெண்களும் கொழும்பில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (க)

---

### 25வது ஒலிம்பிக் போட்டி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

போட்டி நிலவி வந்தது. ஆனால் இன்று சோவியத் யூனியன் பிளவுபட்டதினால் இம்முறை ஒன்றுபட்ட ஜேர்மனிக்கும், அமெரிக்காவுக்குமிடையே மிகவும் கடும் போட்டி நிலவக் கூடுமென உலக விளையாட்டு அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

''இன்னும் உயரமாய்'', ''இன்னும் வேகமாய்'', ''இன்னும் அதிகமாய்'' என்னும் தாரக மந்திரத்தைக் கொண்ட ஒலிம்பிக் போட்டிகள் உலக நாடுகளை ஒன்றிணைக்கும் பாலமாக விளங்க வேண்டும் என்பதே இன்றைய அனைத்து மக்களினதும் அவாவாகும். (வி)

---

### வடக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஊக்குவிப்புத்திட்டத்தினால் ஆசிரியர் தொகை 8750 ஆல் குறைந்துள்ளதாகவும் மத்திய வங்கியின் அறிக்கை தெரிவித்துள்ளது

---

### தொண்டர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லில் ஒன்றைக் கடைப்பிடித்து பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க உத்தர விடவேண்டும் என சங்கம் வலியுறுத்தியுள்ளது. சங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட மாற்று யோசனைகளாவன:

ஃ நேர்முக பரீட்சை நடத்தும் பொறுப்பை மாகாண அமைச்சிடம் விடுவது.

ஃ அமைச்சிலுள்ள யாழ், வரக்கூடிய வேறு அதிகாரிகளை அனுப்பி நடாத்துதல்.

ஃ வடமாகாணத்திலுள்ள கல்விப்பணிப்பாளர்களை மாவட்டங்களை மாற்றி நேர்முகப் பரீட்சையை நடாத்த அனுமதித்தல்.

ஃ வடமாகாணத்திலுள்ள கல்விப்பணிப்பாளர்களில் ஒரு பகுதியினர் அல்லது முழுவரும் கொண்டசபையைக் கொண்டு நேர்முகப்பரீட்சையை நடாத்துதல்.

---

### கடற்படையினரின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து நடைபெறும் தாக்குதலினால் மீன்பிடிப்பதற்கு மீனவர்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

இதேவேளை இயக்கச்சிப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் மாசார், சோரன்பற்று பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதலை நடத்தி வருகின்றனர். [156]

---

### இலங்கை உளவுத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்கப்பட்டிருப்பது இந்திய இலங்கை உறவில் பெரும் விரிசலை ஏற்படுத்திவருகின்றது.

ஐ. நா. சபை விதிகளின்படி உளவுத்துறை அதிகாரிகள் தூதரக அதிகாரிகளாக செயல்படக் கூடாதென்பதையும் மறுத்து இலங்கை அரசாங்கம் இந்நியமனத்தை வழங்கியிருப்பதாக 'நக்கீரன்' இதழ் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை மேலும் தகவல் தருகையில் ''சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தில் பணிபுரியும் ஊழியர்களில் தமிழ் தெரிந்த ஒரே அதிகாரி இவராவார். இங்குள்ள லட்சக்கணக்கான தமிழ் அகதிகள் பற்றி இவருக்கு கவலையில்லை. காரணம் இவரின் வேலையோ இந்தியாவில் உளவுவேலை பார்ப்பதும் தமிழகத்தில் வன்முறைகளை உண்டாக்கவும் இவர் ஒரு இருமாத இலங்கை வைத்துக் கொண்டு துரிதமாகசெயல்படுகின்றார்.

இவரது செயல் தமிழ்நாட்டின் பலபகுதிகளிலும் விரக்தியடைந்த போராளிகளை வைத்து வெடிகுண்டுகளை வெடிக்கவும் அந்தப் பழியை விடுதலைப் புலிகள்மேல்போடவும் தீவிரமாக செயல்பட்டு வருகின்றார். இந்தச்சதி செயலுக்கு தெரிந்தோ தெரியாமலோ தமிழக அரசின் அதிகாரிகளும் காவல்துறையும் பலியாகி பிரான்சிஸ் அலகுடன் இரகசிய உறவுகள் வைத்துள்ளனர்-

இவர்இலங்கையில் பொலிஸ் இராணுவ, விமானப்படை, கடற்படை ஆகியவற்றின் கூட்டு நடவடிக்கைகளுக்கு தலைமைவகித்த அதிகாரியாவார். இவர் வவுனியா நகர சபை கட்டிடத்தை பாதுகாப்புப் படையினர் காலிசெய்வதாக காட்டி மக்களை ஏமாற்றினாலும், கூட்டு இராணுவ நடவடிக்கையால் சிறப்பு தலைமையகமாக இக்கட்டிடத்தை இன்று செயல்பட வைத்துள்ளார்.

அந்நிய நாடுகள் இந்தியாவைத் துண்டாக்கப்பார்க்கும் இத்தருணத்தில் அன்னியநாட்டின் உளவுத்துறையை இங்கு அதிகாரபூர்வமாக உலாவ விடுவது நம்நாட்டிற்குத்தான் கஷ்டம் எனவும் நக்கீரனில் கண்டிக்கப்பட்டுள்ளது. (எஸ்)

---

## இந்திய ஜனாதிபதித் தேர்தல் இன்று நடைபெறுகிறது
## 3 வேட்பாளர்கள் களத்தில்

(புதுடில்லி)

இந்தியாவின் 9வது குடியரசுத் தலைவருக்கான தேர்தல் இன்று 13ம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறுகின்றது

இதற்கான வாக்குப்பதிவுகள் இந்திய நாடாளுமன்றத்திலும் மாநிலதலைநகரங்களிலும் ஒரே நேரத்தில் நடைபெறும்.

இந்திரா காங்கிரஸ் வேட்பாளரும், இந்திய உப ஜனாதிபதியுமான டாக்டர் சங்கர் தயாள் சர்மாவும், தேசியமுன்னணி, பாரதிய ஜனதாகட்சி ஆகியவை ஆதரிக்கும் பேராசிரியர் ஜி, வி. ஸ்வெலும் பிரதான போட்டியாளர்களாக இருக்கின்றார்கள்.

வேட்புமனு தாக்கல் செய்த ராம்சேட் மலானி போட்டியிலிருந்து விலகிக்கொண்டார்.

காகா ஜெயிந்தர்சிங் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடுகின்றார்.

நாடாளுமன்றத்திலுள்ள இரு சபைகள், மாநில சட்டப்பேரவை ஆகியவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும், இந்திய ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கத்தகுதி பெற்றிருக்கின்றார்கள்.

இம்மாதம் 16ம் திகதி வியாழக்கிழமை காலை வாக்குகள் எண்ணும் பணி தொடங்கும் என்றும்-

புதிய குடியரசத்தலைவர் இம்மாதம் 25ம் திகதிபதவியேற்கவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் எதிர்வரும் 24ம் திகதி தமது பதவியிலிருந்து ஓய்வு பெறுவது குறிப்பிடத்தக்கது. [க-சு]

---

### பல காவலரண்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டிக் குளத்தின் எல்லைப் பகுதிகளிலுள்ள பல ராணுவ காவலரண்களிலிருந்து சிறிலங்கா டைடயினர் பின்வாங்கியுள்ளனர்.

தந்திரிமலைப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பல காவலரண்களிலிருந்தும் இராணுவத்தினர் பின் வாங்கி முகாம்களுக்கு சென்று விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்டுப் பொத்த இராணுவ முகாம் தகர்ப்பை அடுத்து படையினர் மத்தியில் ஏற்பட்ட அச்ச நிலையே இக் காவலரண்களிலிருந்து பின் வாங்குவதற்கான காரணமாக இருக்கலாம் என்று தெரியவருகிறது. (ரி)

---

### மண்ணெண்ணை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணை, சவர்க்காரம்போன்ற பொருட்களை பதுக்கியும், கூடிய விலையில் விற்றும் வந்த வர்த்தகர்கள்மீது காவல்துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் இதுவரைகாலமும் மண்ணெண்ணையைப் பதுக்கிய வர்த்தகர்கள் தற்போது தேங்காயெண்ணை. சவர்க்காரம் போன்றபொருட்களையும் பதுக்கியும், கூடிய விலையில் விற்றும் வருகின்றனர். இவர்கள் மக்கள் படும் துன்பங்களையோ, துயரங்களையோ உணராதவர்கள். எமது மக்கள் மீது பெரும்துன்பச் சுமையைத் திணிப்பவர்கள், மனிதநேயமற்ற இவர்களது செயல் மிகவும் கண்டிக்கத்தக்கதொன்றாகும்.

இவ்வாறு மக்கள் விரோத செயல்களில் ஈடுபட்ட பல வர்த்தகர்கள்மீது காவல்துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இவ்வாறு நடவடிக்கை எடுத்த பின்னர் திரும்பவும் இத்தீய செயல்களில் ஈடுபடுவார்களாயின் இவர்களது பொருட்கள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்படுவதுடன், நீண்டகாலத்திற்கு தடுத்தும் வைக்கப்படுவர். இவர்களைப் பற்றிய தகவல்களை உடனுக்குடன் தந்துதவும் பொதுமக்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

---

## ஷெல் தாக்குதல்

[வவுனியா]

வவுனியா நெளுக்குளம் பகுதியிலிருந்து குடியிருப்புகளை நோக்கி நேற்று முன்தினம் பலத்த ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

---

### தம்புல்ல

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

னர். சுமார் 10 நிமிடங்கள் வரை இந்த சத்தியாக்கிரக போராட்டம் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

சத்தியாக்கிரகத்தைஅடுத்து அதில் கலந்துகொண்ட அனைவரும் உல்லாசப் பிரயாண ஹோட்டல் திட்டம் நிர்மாணிக்கப்படும் இடத்திற்கு ஊர்வலமாகப் புறப்பட்டனர்.

அப்பொழுது சுமார் 6000 பொலிஸார் இவர்களைத் தடுத்து நிறுத்தினர். எனினும் அப்பகுதியிலிருந்த பெருமளவு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து மக்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில்பொலிஸார் ஊர்வலத்தை அனுமதிக்கவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தம்புல்லயில் அரசு மேற்கொள்ளவிருக்கும் உல்லாசப் பிரயாண ஹோட்டல் திட்டத்தை எதிர்த்தே நேற்று இந்த சத்தியாக்கிரக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

---

### புலிகளின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கருகிலுள்ள கட்டுப்பொத்த இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் முற்றாக அழிக்கப்பட்டதையடுத்தே இச்சரணாலயம் மூடப்பட்டதாக கூறப்படுகிறது.

---

### யாழ். குடாநாட்டை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இராணுவத்தினர் கொல்லப்பட்டது யாழ் குடாநட்டிற்குள் ஆயிரக்கணக்கான இராணுவத்தைக் குவிக்கும் உத்தி பற்றி கேள்விக்குறியையும் எழுப்பியுள்ளது.

யாழ் குடாவில் இராணுவத்தைக் குவித்திருப்பதன் விளைவாக வடபகுதியின்ஏனைய பகுதிகளும் கிழக்கு மாகாணமும் தாக்குதலுக்கு இலக்காகக்கூடிய நிலைமை உருவாகியுள்ளது என்றும் பி பி. ஸி. மேலும் தெரிவித்தது.

---

### பிரேமா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னிப்பு கோரினாலும் அவர் பிரச்னையை விடுவதாக இல்லை.

தம்மைச் சம்பந்தப்படுத்தி 'சண்டே ஒப்சேவர்', 'சிலுமின' பத்திரிகைகளில் வெளியான கருத்துக்களை எழுதிய அநுருத் திலகசிறி என்ற பெயரில எழுதும் தயானி ஜயதிலக என்பவர் தம்மிடம் நேரடியாக மன்னிப்புக் கோரவேண்டும் என்று திரு. ஜெயவர்த்தன புதிய நிபந்தனை ஒன்றை இப்போது விதித்திருக்கிறார்.

லேக்ஹவுஸ் விவகாரத்தின் பின்னணியில் திரு. பிரேமதாசாவே இருப்பதாகவும், அவருக்குப் பதிலாகவே வேறு ஒருவர் சம்பந்தப்பட்ட கருத்துக்களைத் தெரிவித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் தயானி ஜயதிலகா திரு. ஜெயவர்த்தனாவிடம் நேரடியாக மன்னிப்புக் கேட்கவேண்டிய அவசியமில்லை என்று பிரேமதாசா தரப்பில் கருத்துத்தெரிவிக்கப்பட்டிருப்பதாக பி. பி. சி. நேற்றுத் தெரித்தது.

---


## மரண அறிவித்தல்

### தம்பியையா நேசரத்தினம்

(கிளாக்கர்)

ஈவினை, புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பியையா நேசரத்தினம் 12-07-1992 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1-00 மணியளவில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற பத்மராணியின் அன்புக் கணவரும், திருநாவுக்கரசு U. K. ஜெயராணி (வயாவிளான் ம. ம. வி. ஆங்கில ஆசிரியை) சரோஜினி U. K., புஷ்பராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், கலைவாணி U. K, ரவிராஜ் (நில அளவையாளர்) சுரேந்திரமோகன் U. K. ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை நடந்து முடிந்தது. அதிகாலை 1-00 மணியளவில் காலமானதால் பத்திரிகையில் அன்றே அறியத் தர முடியவில்லை என்பதை மனவருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

தகவல்:
திருமதி ரவிராஜ்
[மகள்].

(சி 6531)


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கிவன்கோவில் மேற்கு வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூலை மாதம் 13ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genera Post office Sri Lanka under Licence Number B/10336/8